بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

இறைவனால் அனுப்பப்பட்டவர் கூறுவதை கேட்டு நடப்பது நம்பிக்கையாளர் மீது கடமையாக இருக்கின்றது. அதை அவர்கள் புரிய வேண்டும். அதற்கு சுயமாக தான் ஒரு விளக்கத்தை கூறுவதற்கு பகரமாக இறைவனால் அனுப்பப்பட்டவர் கூறியதற்கேற்ப அப்படியே செயல்பட்டால் அவரது அந்த செயல் வீணாகிவிடாது.

*அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர் ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்*

*(அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்- அல்லாஹ் தனது வல்லமைமிக்க உதவியினால் அவர்களை வலுப்படுத்துவானாக)*

*அவர்கள் பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில் 24.07.2015 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்*

தஷஹ்ஹுத், தஅவ்வுத் மற்றும் சூரா ஃபாத்திஹா ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:

இப்போது நான் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மற்றும் அன்னாரது சஹாபாக்கள் தொடர்பாக ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறியுள்ள சம்பவங்களை எடுத்துக் கூறுவேன்.

தத்கிராவில் 1908 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 9 ஆம் தேதியில் ஒரு இல்ஹாம் வந்திருப்பது பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த நாளில் 8 இல்ஹாம்கள் இறங்கியது. அதில் ஓர் இல்ஹாம் لَا تَقْتُلُوْا زَيْنَب அதாவது ஸய்னபை கொலை செய்ய வேண்டாம் என்பதாகும். சம்பவத்தின் விளக்கத்தில் அப்போது நிலவிய சூழ்நிலைகளுக்கு ஏற்ப இதைப் பற்றி ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் இவ்வாறு எடுத்துக் கூறுகின்றார்கள்:

1908 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் மர்ஹூம் ஹாபிழ் அஹ்மதுல்லாஹ் சாஹிப் அவர்களது இரு மகள்களின் திருமணம் தொடர்பாக ஆலோசனை நடந்து வந்தது. இவர்களில் மூத்த மகளின் பெயர் ஸைனப் ஆகும். சிறிய மகளின் பெயர் குல்ஸூம் ஆகும். ஸைனப் அவர்களை திருமணம் செய்து கொள்ள வேறு இடங்களிலிருந்தும் பலரும் தங்களது விருப்பத்தை தெரிவித்திருந்தனர். ஷேக் அப்துர் ரஹ்மான் சாஹிப் மிஸ்ரி அவர்களும் இவர்களை திருமணம் செய்து கொள்ள தூது அனுப்பி இருந்தார்கள். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு மிஸ்ரி சாஹிபுடன் இவர்களை திருமணம் செய்து கொடுப்பதற்கு விருப்பமில்லாமல் இருந்தது. அவருடம் திருமணம் நடக்கக்கூடாது என்றே அவர்கள் விரும்பினார்கள். ஆனால், தனது வழக்கத்திற்கேற்ப இவ்விஷயத்தை அவர்கள் அதிகமாக வலியுறுத்திக் கூறவில்லை. எவ்வாறிருப்பினும் அவர்கள் தனது மகளை மிர்ஸி சாஹிபிற்கு திருமணம் முடித்துக் கொடுத்தார்கள்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் இவ்வாறு எழுதுகின்றார்கள்.

மிஸ்ரி சாஹிபின் திருமணம் வேறு இரு திருமணங்களுடன் சேர்த்து அதே நாளில் நடந்தது. அதே நாளில் எனது சகோதரியான முபாரக்கா பேகம் அவர்களது திருமணமும் நடந்தது. திருமணம் நடந்த நாள் பிப்ரவரி மாதம் 17 ஆம் தேதி ஆகும். இந்த நபர் மூலமாக ஒரு பெரிய குழப்பம் உருவாக இருக்கின்றது என்பதையே அல்லாஹ் இந்த இல்ஹாம் மூலமாக வெளிப்படுத்தியுள்ளான். ஏனென்றால், பிறகு மிஸ்ரி சாஹிப் மூலம் குழப்பம் உருவாகியது. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஹாபிழ் அஹ்மதுல்லாய் சாஹிப் அவர்களுக்கு இந்த ஆலோசனையைத் தான் வழங்கினார்கள் என்பதற்கான உறுதியான ஆதாரம் இருக்கின்றது. மிஸ்ரி சாஹிப் ஜமாஅத்தை விட்டு பிரிந்து சென்ற சமயத்தில் பீர் மன்ஸூர் அஹ்மது சாஹிப் அவர்கள், எனக்கு முன்னால் வைத்து தான் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஹாபிழ் அஹ்மதுல்லாஹ் சாஹிப் அவர்களிடம் ஷேக் அப்துர் ரஹ்மான் சாஹிபிற்கு உங்கள் மகளை திருமணம் செய்து கொடுக்காதீர்கள் என்று கூறினார்கள். ஆனால், ஹாபிழ் சாஹிப் இந்த விஷயத்தை ஏற்றுக் கொள்ளாமல் அந்த இடத்தில் தனது மகளை திருமணம் செய்து கொடுத்த போது எனக்கு கடுமையான கோபம் வந்தது என்று பீர் மன்ஸூர் அஹ்மது சாஹிப் அவர்கள் எனக்கு தெரிவிக்கும்படி செய்தி அனுப்பி இருந்தார்கள் என்று ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறினார்கள்.

பீர் மன்ஸூர் அஹ்மது சாஹிப் அவர்கள் தொடர்ந்து கூறுகின்றார்கள்: நான் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களது சமூகத்தில் சென்றேன். நான் கூறினேன். ஹுஸூர் (அலை) அவர்கள் இறைவனிடமிருந்து அனுப்பப்பட்டவர்களாக இருக்கின்றீர்கள். இறைவனால் அனுப்பப்பட்டவர் ஒரு விஷயத்தை கூறினால் எல்லா நம்பிக்கையாளர்களும் அதற்கேற்ப செயல்பட வேண்டும் என்பது இறைவனின் கட்டளையாகும். ஆனால், ஹாபிஹ் அஹ்மதுல்லாஹ் சாஹிப் அவர்கள் ஹுஸூர் (அலை) அவர்களுக்கு கீழ்ப்படியாமல் இருந்திருக்கின்றார்கள் என்று நான் கூறினேன். இதைக்கேட்ட ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள், நீங்கள் கூறிய விஷயம் சரியானது தான். அப்படிப்பட்ட விவகாரங்களில் நான் தலையிடுவதில்லை என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: எனக்கும் நினைவில் இருக்கின்றது. ஒரு முறை ஹஸ்ரத் முதலாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்களது காலகட்டத்தில் ஷேக் மிஸ்ரி சாஹிப் அவர்கள் கடை வீதியில் வைத்து தனது மாமனாரை கடுமையாக அடித்தார். இதனால் முதலாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் அவர் மீது கடுமையாக வெறுப்படைந்தாகள். பிறகு பல நாட்கள் நான் அவர்களிடம் மிகவும் கெஞ்சி அவரை மன்னிக்கும்படி கூறினேன். மிஸ்ரி சாஹிப் அவர்களுக்கு ஜமாஅத்தில் என்ன தகுதி இருந்தது என்பதை இதிலிருந்து கணித்துக் கொள்ளலாம் என்று தெரிவித்தவாறு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்: எனக்கு ஒரு நண்பர் ஆப்ரிக்காவிலிருந்து கடிதம் எழுதினார். அதில் அவர் மிஸ்ரி சாஹிப் அவர்கள் ஜமாஅத்தை விட்டு தனியாக பிரிந்து சென்றதில் எனக்கு மிகுந்த அச்சம் ஏற்பட்டுள்ளது. இவ்வளவு பெரிய மனிதரது ஈமானே விணாகி போய்விட்டது என்றால் எங்களது ஈமானின் உண்மை நிலையைப்பற்றி என்ன சொல்வது ? என்று அவர் எழுதியிருந்தார்.

முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: நான் அவருக்கு யார் பெரியவர் என்பதை தீர்மானிப்பது அல்லாஹ்வின் பணியாகும். இது உங்களது பணியல்ல. எவரை நீங்கள் பெரியவர் என்று கருதுகின்றீர்களோ அவரை தனது செயல் மூலமாக அல்லாஹ்வே ஜமாஅத்தை விட்டு தனியாக பிரித்துவிட்டு உங்களை ஜமாஅத்தில் வைத்திருக்கும் போது அதன் மூலம் பெரியவர் நீங்கள் தான். அவர் அல்ல என்பதை அல்லாஹ் நிரூபித்திருக்கின்றான் என்று எழுதியிருந்தேன்.

**இறைவனால் அனுப்பப்பட்டவர் கூறுவதை கேட்டு நடப்பது நம்பிக்கையாளர் மீது கடமையாக இருக்கின்றது. அதை அவர்கள் புரிய வேண்டும். அதற்கு சுயமாக தான் ஒரு விளக்கத்தை கூறுவதற்கு பகரமாக இறைவனால் அனுப்பப்பட்டவர் கூறியதற்கேற்ப அப்படியே செயல்பட்டால் அவரது அந்த செயல் வீணாகிவிடாது.**

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் இன்னொரு சம்பவத்தை விளக்கிக்கூறியவாறு இவ்வாறு கூறுகின்றார்கள். மவ்லவி முஹம்மது அஹ்ஸன் சாஹிப் அவர்களது இயல்பில் அவசரப்படும் தன்மை அதிகமாக இருந்தது. ஒரு முறை ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் பஸ்ரவானின் பக்கம் உலாவுவதற்காக சென்றார்கள். அப்போது ஹுஸூர் (அலை) அவர்கள், இறைவனது சொற்களுக்கும் அவனது அடியானின் சொற்களுக்கும் இடையில் மிகப்பெரும் வித்தியாசம் இருக்கின்றது என்று கூறிவிட்டு, தனக்கு வந்த ஒரு இல்ஹாமை மவ்லவி சாஹிபிடம் கூறினார். பிறகு இதுவும் ஒரு இல்ஹாமாகும். இதற்கெதிரில் ஹரீரியின் சொற்களும் இருக்கின்றது. அவரும் படித்தவர் தான் என்று கூறினார்கள். மவ்லவி சாஹிப் அவர்கள் ஹுஸூர் (அலை) அவர்கள் கூறியவற்றில் இறுதிப் பகுதியை சரியாக கேட்கவில்லை. மேலும் அந்த இல்ஹாம் தொடர்பாக அது ஹரீரியின் சொற்களாகும் என்று கருதினார்கள். பிறகு இது முற்றிலும் வீணான விஷயமாகும் என்று கூறினார்கள். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள், இது இறைவனின் இல்ஹாமாகும் என்று கூறினார்கள். அதைக்கேட்ட மவ்லவி சாஹிப் அவர்கள், சுப்ஹானல்லாஹ். எவ்வளவு சிறந்த சொற்களாக இவை இருக்கின்றன என்றார்கள். எனவே, **எந்த விஷயம் தொடர்பாகவும் தமது கருத்தை நிலைநாட்டுவதற்கு முன்பு ஒருபோதும் அவசரப்படக்கூடாது.**

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: மவ்லவி முஹம்மது ஹுஸைன் பட்டாலவி அவர்கள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் நண்பராக இருந்தார். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களது வாதத்திற்குப் பிறகு மவ்லவி சாஹிப், நானே இவரை உயர்த்தினேன். இப்போது நானே அவரை வீழ்த்துவேன் என்று கூறினார்கள். ஆனால் அல்லாஹ் மவ்லவி சாஹிப் அவர்களின் பெயரை அழித்து விட்டான். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களது பெயரை உலகில் பரவும்படி செய்து விட்டான்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் மவ்லவி முஹம்மது ஹுஸைன் சாஹிப் பட்டாலவியின் ஒரு மகன் ஆரியராக ஆகிவிட்டார். நான் அவரை காதியானுக்கு வரும்படி அழைத்தேன். பிறகு நான் அவரை முஸ்லிமாக்கி விட்டேன். மவ்லவி முஹம்மது ஹுஸைன் சாஹிப் அவர்கள் இதற்காக நன்றி தெரிவித்தவாறு எனக்கு கடிதமும் எழுதினார்.

**இரண்டாவது கிலாஃபத்தின் காலகட்டத்தில் ஜமாஅத்திற்கு உள்ளேயும், வெளியேயும் இருந்த எதிர்ப்புகளைப்பற்றி குறிப்பிட்டவாறு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களது காலத்திலிருந்தே எதிர்ப்பு இருந்து வருகிறது. ஆனால், ஜமாஅத் முன்னேறிக் கொண்டே செல்கிறது. இன்று வரை பல்வேறு எதிர்ப்புகளும், சூழ்ச்சிகளும் ஜமாஅத்திற்கு எதிராக தொடர்ந்து இருந்து வருவதையும் நாம் பார்க்கின்றோம். ஆனால் அல்லாஹ்வின் அருளால் ஜமாஅத் முன்னேறிக் கொண்டு இருக்கிறது.**

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள், **ஜமாஅத் முற்களில் நடந்து சென்றவாறு இந்த தகுதியை அடைந்திருக்கின்றது** என்று கூறுகின்றார்கள். அல்லாஹ்வின் அருள் எப்போதும் ஜமாஅத்திற்கு இருந்து வந்திருக்கின்றது என்பதை இந்த விஷயம் எடுத்துக் கூறுகிறது. ஆனால், **இந்த அருளை நிரந்தரமானதாக ஆக்குவதற்கு ஜமாஅத் எப்போதும் துஆக்கள் செய்து வர வேண்டும். அவ்வாறு நாம் துஆக்கள் செய்து வந்தால் தற்போது இருக்கின்ற எதிர்ப்பும், வருங்காலத்தில் ஏற்பட இருக்கும் எதிர்ப்புகளும் தாமாகவே அழிந்துவிடும். இன்ஷா அல்லாஹ்.**

ஒரு சந்தர்ப்பதில் ஹஸ்ரத் மவ்லவி அப்துல் கரீம் சாஹிப் (ரலி) அவர்களது ஈடு இணையற்ற தியாகத்தைப்பற்றி குறிப்பிட்டவாறு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் முதலாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களுக்கு அல்லாஹ் மிகவும் உயர்வான நிலையில் இருந்த ஒரு வேலையை வழங்கியிருந்தான். அந்த வேலையை விட்டுவிட்ட பிறகு அவர்கள் தமது ஊரிலேயே மருத்துவ தொழிலை செய்து வந்தார்கள். அங்கு அவர்களுக்கு மிகப்பெரிய புகழ் இருந்து வந்தது. அவர்களது ஊர் சர்கோதா மாவட்டத்திலுள்ள பேராவாகும். அங்கு பெரும் பெரும் பொறுப்பாளர்கள் இருந்தனர். அவர்களில் அதிகமானோர் அன்னார் மீது அளவு கடந்த பற்று வைத்திருந்தனர். எனவே அங்கு அவர்களது பணி நடப்பதற்கு அதிகமான சாத்தியம் இருந்தது. ஆனால் அவர்கள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை சந்திப்பதற்காக காதியான் வந்தார்கள். சில நாட்களுக்குப் பிறகு திரும்பி செல்ல நினைத்த போது ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் நீங்கள் உலகத்தில் பலவற்றையும் பார்த்து விட்டீர்கள். இப்போது இங்கேயே வந்து அமர்ந்து விடுங்கள் என்று கூறினார்கள். அவர்கள் இந்த கட்டளைக்கேற்ப செயல்பட்டார்கள். எந்த அளவுக்கு அந்த கட்டளையை பேணி நடந்தார்கள் என்றால், தமது பொருள்களை எடுத்து வருவதற்கு கூட அவர்கள் தமது ஊருக்கு செல்லவில்லை. மாறாக, மற்ற நபர்களை அனுப்பி பெருள்களை எடுத்து வரும்படி செய்தார்கள். அந்த காலத்தில் இங்கு மருத்துவ தொழில் நடப்பதற்கு எந்தவொரு நம்பிக்கையும் இல்லாமல் இருந்தது. பைசா கொடுப்பதற்கு தகுதியுள்ள எவருமே இருக்கவில்லை. ஆனால் அவர்கள் எந்த விஷயத்தையும் பொருட்படுத்தவில்லை. ஆனால் அவர்களது புகழ் எந்த அளவு பரவி இருந்தது என்றால் வெளியூர்களிலிருந்து நோயாளிகள் அவர்களிடம் வந்தனர். இவ்வாறு ஏதாவதொரு வகையில் வருமானத்திற்கான வழி ஏற்பட்டது. ஆனால் மவ்லவி அப்துல் கரீம் சாஹிப் அவர்களது தியாகம் எத்தகையதாக இருந்தது என்றால் அவர்களுக்கு வருமானம் வருவதற்கான எந்தவொரு வாய்ப்பும் இருக்கவில்லை. ஃபீஸ் கிடைப்பதற்கான நம்பிக்கையும் இருந்ததில்லை. அவ்வாறே சம்பளமோ அல்லது உதவித்

தொகையோ கிடைப்பதற்கான வழியும் இருக்கவில்லை. எந்த தரப்பிலிருந்தும் எத்தகையதொரு வருமானத்திற்கும் வழி இல்லாமல் இருந்தது. அவர்கள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களது செயலாளராக பணிபுரிந்துள்ளார்கள்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: இப்போது ஜமாஅத்திலுள்ள எல்லா துறைகளும் சேர்ந்து எந்த பணியை செய்து வருகின்றதோ அதனை அப்போது மவ்லவி சாஹிப் அவர்கள் மட்டுமே செய்து வந்தார்கள். ஆனால் வாழ்நாளை கழிப்பதற்கான எந்தவொரு வழியும் அவர்களுக்கு இருக்கவில்லை. இதுவும் கூட புற்பூண்டுகள் முளைக்காத ஓர் பள்ளத்தாக்கில் தனது உயிரை அர்ப்பணிக்கின்ற விஷயமேயாகும். எனவே, நமது பெரியோர்களது இந்த முன்மாதிரியை ஜமாஅத்திற்காக வாழ்வை அர்ப்பணித்தவர்கள் அவ்வப்போது தங்கள் கண் முன்னால் கொண்டு வர வேண்டும். பிறகு அவற்றை பற்றி சிந்திக்க வேண்டும்.

பிறகு ஹஸ்ரத் மவ்லவி அப்துல் கரீம் சாஹிப் அவர்களுக்கு ஹுஸூர் (அலை) அவர்கள் மீதிருந்த பேரன்பு தொடர்பாக ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மீது மவ்லவி அப்துல் கரீம் சாஹிப் அவர்களுக்கு குறிப்பான பேரன்பு இருந்து வந்தது. அது எத்தகைய பேரன்பாக இருந்ததென்றால் அந்த காலத்தை பார்த்தவர்களால் தான் அதை புரிந்து கொள்ள முடியும். மற்ற மக்கள் அதை யூகித்து கூட பார்க்க முடியாது. எனக்கு 16 அல்லது 17 வயதாக இருந்த சமயத்தில் தான் மவ்லவி சாஹிப் அவர்கள் வஃபாத் ஆனார்கள். எந்த காலத்தில் நான் அவர்களிடமிருந்த அன்பை அடையாளம் கண்டு கொண்டேனோ அப்போது எனக்கு 12 அல்லது 13 வயதிருக்கும். அதாவது அப்போது எனக்கு சிறு வயதாக இருந்தது. அவ்வாறிருந்தும் கூட எத்தகைய ஆழமான சுவடு எனது உள்ளத்தில் பதிந்திருந்ததென்றால் மவ்லவி சாஹிப் தொடர்பாக இரு விஷயங்களை என்னால் ஒருபோதும் மறக்க முடியாது. ஒன்று, அவர்கள் தண்ணீர் குடிப்பது. மற்றொன்று, ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மீது அன்னாருக்கு இருந்த பேரன்பு. அவர்கள் குளிர்ந்த நீரை மிகவும் விரும்பினார்கள். மிகவும் ஆர்வத்துடன் அதை அருந்துவார்கள். தண்ணீர் குடிக்கும் போது கட் கட் என்று ஒரு சப்தம் வரும். அது அல்லாஹ் சொர்க்கத்திற்கான எல்லா அருட்கொடைகளையும் ஒன்றுசேர்த்து அவர்களுக்காக அனுப்பி வைத்தது போன்று இருக்கும். ஒரு சில மடக்கு தண்ணீர் அருந்திய பிறகு அல்ஹம்துலில்லாஹ்; அல்ஹம்துலில்லாஹ் என்று கூறுவார்கள்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: அந்த காலத்தில் இந்த மஸ்ஜிது அக்ஸாவிலுள்ள கிணற்றுத் தண்ணீர் மிகவும் புகழ்பெற்று விளங்கியது. ஆனால் இப்போது மக்கள் அதன் பெயரைக் கூட ஏன் கூறாமல் இருக்கின்றார்கள் என்று தெரியவில்லை. மவ்லவி சாஹிபுடைய வழிமுறை எவ்வாறிருந்ததென்றால், சகோதரரே! நற்கூலியை சம்பாதியுங்கள். தண்ணீர் கொண்டு வாருங்கள் என்று கூறுவார்கள். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களே சபையில் இருந்தால் வேறு விஷயமாகும். அவ்வாறு இல்லையென்றால், மவ்லவி சாஹிப் அவர்களே மாடிப்படிக்கு அருகில் வந்து காத்திருப்பார்கள். பிறகு தண்ணீர் கொண்டு வருபவரிடமிருந்து குவளையைப் பெற்று அதில் வாய் வைத்து குடிப்பார்கள். இரண்டாவது விஷயம் என்னவென்றால், அவர்கள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு அருகில் அமர்ந்திருக்கும் போது அவர்களது கண்கள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களது உடலிலிருந்து எதையோ தின்று கொண்டிருப்பதைப் போன்று தெரியும். அப்போது அவர்களது முகத்தில் மகிழ்ச்சி மற்றும் பொழிவின் ஒரு தோற்றம் தென்படும். அவர்களது முகத்திலுள்ள ஒவ்வொரு அணுவும் மகிழ்ச்சியின் அலையை வீசிக் கொண்டிருக்கும். எவ்வாறு புன்னகை பூத்தவாறு அவர்கள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுவதைக் கேட்பார்கள் என்றால் மேலும் இங்கும் அங்கும் திரும்பியவாறு ஹுஸூர் (அலை) அவர்கள் கூறுபவற்றை புகழ்ந்து கூறுவார்கள் என்றால் அது கண்கொள்ளாக் காட்சியாக இருக்கும்.

இதே போன்ற நிலையை சிறிதளவு வேறு எந்த நபரிடமாவது எனக்கு பார்க்க முடிந்ததென்றால் அது ஹஸ்ரத் ஹாபிழ் ரோஷன் அலி சாஹிப் மர்ஹூம் (ரலி) அவர்கள் ஆவார்கள். சுருக்கமாக கூறுவதென்றால், மர்ஹூம் மவ்லவி அப்துல் கரீம் சாஹிப் அவர்களுக்கு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மீது குறிப்பான அன்பு இருந்தது. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கும் மவ்லவி சாஹிபின் மீது அதே போன்ற அன்பே இருந்தது. மக்ரிப் தொழுகைக்குப்பிறகு எப்போதும் அமர்ந்து பேசிக்கொண்டிருப்பது ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களது வழிமுறையாக இருந்து வந்தது. ஆனால், மவ்லவி சாஹிப் அவர்களது வஃபாத்திற்குப் பிறகு ஹுஸூர் (அலை) அவர்கள் அவ்வாறு செய்வதை விட்டுவிட்டார்கள். ஒருவர் ஹுஸூர் இப்போது நீங்கள் ஏன் அமர்வதில்லை என்று கேட்டார். அதற்கு ஹுஸூர் (அலை) அவர்கள், **மவ்லவி அப்துர் கரீம் சாஹிப் அவர்கள் இருக்கும் இடம் காலியாக இருப்பதைப் பார்த்து எனக்கு வேதனை ஏற்படுகின்றது** என்று கூறினார்கள். ஆனால், ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை விட இறைவனைப்பற்றி அவன் ஹய்யாக அதாவது மீண்டும் உயிர் கொடுக்கக்கூடியவனாக இருக்கின்றான் என்பதில் வேறு எவருக்கு அதிகமான உறுதி இருந்திருக்க முடியும். எனவே, இது ஒரு தரப்பில் மட்டும் இருந்த அன்பு அல்ல. மாறாக, ஹுஸூர் (அலை) அவர்களுக்கு சஹாபாக்கள் மீது மிகுந்த அன்பு இருந்து வந்தது.

பிறகு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களது இன்னொரு சஹாபியான ஹஸ்ரத் முன்ஷி அரோடே கான் சாஹிப் (ரலி) அவர்களுக்கு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மீதிருந்த பேரன்பை பற்றி குறிப்பிட்டவாறு முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்:

ஹஸ்ரத் முன்ஷி அரோடே கான் சாஹிப் அவர்களுக்கு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மீது பேரன்பு இருந்தது. அவர் கபூர்தலாவில் இருந்து வந்தார். கபூர்தலா ஜமாஅத் தொடர்பாக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் எந்த அளவு புகழ்ந்து கூறியிருந்தார்கள் என்றால் அது தொடர்பாக அந்த ஜமாஅத்திற்கு இவ்வாறு ஹுஸூர் (அலை) அவர்கள் எழுதியிருந்தார்கள். அதனை ஜமாஅத் வைத்திருக்கின்றது. **இந்த ஜமாஅத்தைச் சார்ந்தவர்கள் எந்த அளவு கலப்பற்ற மனத்தூய்மையை வெளிப்படுத்திக் காட்டியுள்ளனர் என்றால் இவர்கள் சொர்க்கத்தில் என்னுடன் இருப்பர்**

என்று ஹுஸூர் (அலை) அவர்கள் எழுதியிருந்தார்கள்.

அந்த ஜமாஅத்தை சார்ந்தவர்கள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடம் ஹுஸூர் நீங்கள் எப்போதாவது கபூர்தலாவிற்கு வாருங்கள் என்று மீண்டும் மீண்டும் வேண்டினர். சந்தர்ப்பம் கிடைக்கும் போது வருவேன் என்று ஹுஸூர் (அலை) அவர்களும் அவர்களுக்கு வாக்குறுதி வழங்கியிருந்தார்கள். ஒருமுறை அவர்களுக்கு நேரம் கிடைத்தபோது தகவல் கொடுக்க நேரம் இல்லாததனால் தகவல் கொடுக்காமலேயே அன்னார் கபூர்தலாவிற்கு செல்ல ஆரம்பித்தார்கள். கபூர்தலா ரயில்வே ஸ்டேஷனில் அன்னார் இறங்கியதும் அன்னாரது கடும் எதிரியான ஒருவர் அவர்களைப் பார்த்தார். அந்த எதிரி அவர்களை அடையாளம் கண்டு கொண்டார். அவர் எதிரியாக இருந்தாலும் கூட பெரிய மனிதர்களின் தாக்கம் ஏற்படத்தான் செய்கின்றது.

முன்ஷி அரோடே கான் சாஹிப் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: நாங்கள் ஒரு கடையில் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தோம். அந்த எதிரி ஓடி வந்து உங்களது மிர்ஸா சாஹிப் வந்துள்ளார் என்று கூறினார். இதைக் கேட்டதும் எனது காலணிகளும், தலைப்பாகையும் அங்கேயே கிடக்கும் நிலையில் நான் வெறுங்காலுடனும், தலையில் எதையும் அணியாமலும் ஸ்டேஷனை நோக்கி ஓடினேன். சிறு தூரம் சென்றதும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் நம்மிடம் வரும் அளவிற்கு அந்த அளவு பெரும் நற்பாக்கியம் நமக்கு இருக்கின்றதா ? தகவல் தருபவரும் எதிரியாக இருக்கின்றார். அவர் ஒருவேளை கிண்டலாக இதை கூறியிருக்கலாம் என்று நான் எண்ணினேன். இதனால் அங்கே நின்றவாறு நான் அந்த எதிரியை அதட்ட ஆரம்பித்தேன். நீ பொய் கூறுகின்றாய். கிண்டல் செய்கின்றாய் என்று கூறினேன். பிறகு ஒருவேளை ஹுஸூர் (அலை) அவர்கள் வந்திருக்கலாம் என்று எண்ணியவாறு மீண்டும் ஓடினேன். பிறகு நமக்கு இதுபோன்ற நற்பாக்கியம் கிடைக்க முடியாது என்ற எண்ணம் வந்தது. பிறகு அந்த எதிரியை மீண்டும் திட்ட ஆரம்பித்தேன். ஆக, இவ்வாறு சில சமயங்களில் நான் ஓடினேன். சில சமயங்களில் நின்றேன். இதே நிலையில் நான் சென்று கொண்டிருந்த போது எனக்கு முன்னால் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் நடந்து வருவதை கண்டேன். ஆக, இது பைத்தியம் பிடித்தவரைப் போன்ற ஓர் பேரன்பாகும்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மரணமடைந்து சில நாட்கள் கழிந்த பிறகு ஹஸ்ரத் முன்ஷி அரோடே கான் சாஹிப் (ரலி) அவர்கள் காதியான் வந்தார்கள். அவர்கள் எனக்கு நான் உங்களை சந்திக்க விரும்புகின்றேன் என்று தூது அனுப்பினார்கள். நான் அவர்களை சந்திக்க வெளியில் வந்த போது அவர்களது கைகளில் இரண்டோ அல்லது மூன்றோ பொற்காசுகள் இருப்பதை பார்த்தேன். இதனை அம்மா ஜானிடம் கொடுத்து விடுங்கள் என்று கூறி அவற்றை அவர்கள் என்னிடம் தந்தார்கள். அவர்கள் அப்போது என்ன கூறினார்கள் என்பது இப்போது எனது நினைவில் இல்லை. அம்மா ஜான் என்றோ, அம்மா ஜீ என்றோ அவர்கள் கூறினார்கள். எவ்வாறிருப்பினும், அவர்களது சொற்களில் தாய் என்ற கருத்து கண்டிப்பாக இருந்தது. இதற்குப் பிறகு அவர்கள் அழ ஆரம்பித்தார்கள். எந்த அளவு சப்தமிட்டு கதறி அழ ஆரம்பித்தார்கள் என்றால் அவர்களது முழு உடலும் நடுங்கிக் கொண்டிருந்தது. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களது நினைவு அவர்களை அழ வைத்துள்ளது என்று நான் கருதினேன். ஆனால், அவர்கள் தங்களை கட்டுப்படுத்திக் கொள்ள முடியாத அளவில் எந்த அளவு அதிகமாக அழுதார்கள் என்றால் இதற்கு வேறொரு காரணமும் இருக்க வேண்டும் என்று எனக்கு தோன்றியது. அவர்கள் 15 அல்லது 20 நிமிடங்கள் இன்னும் சொல்வதென்றால் அரைமணி நேரம் வரை அழுது கொண்டே இருந்தார்கள். நான் என்ன விஷயம் என்று கேட்டுக் கொண்டே இருந்தேன். அவர்கள் பதில் கூற முற்பட்டார்கள். ஆனால் உருக்கத்தின் காரணமாக பேச முடியவில்லை. இறுதியில் அவர்களது நிலை சரியான பிறகு அவர்கள் இவ்வாறு கூறினார்கள். நான் பைஅத் செய்த சமயத்தில் எனக்கு ஏழு ரூபாய் சம்பளமாக கிடைத்தது. ஆனால் என்னை சிரமப்படுத்திக் கொண்டு பல வகையிலும் இதற்காக நான் தொகையை மிச்சப்படுத்தி வந்தேன். நானே காதியான் சென்று இதனை ஹுஸூர் (அலை) அவர்களுக்கு வழங்க வேண்டும் என்று விரும்பியிருந்தேன். நீண்ட தொலை தூரத்தை நான் நடந்தே கழித்தேன். அதனால் குறைந்த செலவில் காதியான் சென்று சேர வேண்டும் என எண்ணினேன். அதற்கு பிறகு எனக்கு சம்பள உயர்வு ஏற்பட்டது. அத்துடன் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு எதையாவது வழங்க வேண்டும் என்ற பேராசையும் வளர்ந்து கொண்டே சென்றது. இறுதியில் நான் ஹுஸூர் (அலை) அவர்களுக்கு காணிக்கையாக தங்கம் வழங்க வேண்டும் என்ற எண்ணம் எனது உள்ளத்தில் வந்தது. சந்தா செலுத்துதல் போக எனது சிறிய சம்பளத்திலிருந்து இதையும் நான் வழங்க வேண்டும் என்று நான் விரும்பினேன். ஆனால் கொஞ்சம் கொஞ்சமாக மிச்சப்படுத்தி தொகையை ஒன்று சேர்த்ததும் மீண்டும் அச்சம் ஏற்பட்டது. எனவே, தங்கத்தை பெறுவதற்காக தொகையை ஒன்று சேர்ப்பதற்கு முன்னதாக காதியான் சென்று விட வேண்டும். எது என்னிடம் இருக்கிறதோ அதை ஹுஸூர் அவர்களிடம் கொடுத்து விட வேண்டும் என்று நான் எண்ணினேன். இறுதியில் இந்த மூன்று பவுண்டுகளை நான் ஒன்று சேர்த்திருந்தேன். நானே சென்று இதை அன்னாரிடம் கொடுத்து விட வேண்டும் என்று எண்ணினேன். ஆனால் அதற்குள் அவர்களது வஃபாத் நிகழ்ந்து விட்டது. அவர்களது 30 வருட காலம் இந்த வேதனையிலேயே கழிந்து விட்டது. இறுதியில் அதற்கான நல்வாய்ப்பு கிடைத்த சமயத்தில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் வஃபாத் ஆகிவிட்டார்கள். இது தான் அம்மக்களின் கலப்பற்ற மனத்தூய்மையும், பற்றும், தியாகமும் ஆகும்.

ஹுஸூர் அவர்கள் தொழுகைக்குப்பிறகு காதியானைச் சேர்ந்த தர்வேஷானா மர்ஹூம் மவ்லவி முஹம்மது யூசுஃப் சாஹிப் அவர்களுடைய ஜனாஸா காயிப் தொழுகையை தொழ வைத்தார்கள். 22 ஜூலை 2015 அன்று தனது 94 வது வயதில் இவர்கள் வஃபாத்தாகி விட்டார்கள். இன்னாலில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிஊன்.

Friday Sermon delivered by Hadrath Khaleefathul Masih Alkhamis (atba)
at Baithul Futuh,London – on 24.07.2015
Tamil Translation : Moulavi. M. Rafeeq Ahmed Sb
Published By Nazarath Nashr-O-Isha'ath,Sadr Anjuman Ahmadiyya - Qadian, 143516